முருகப்பெருமான் துணை

**மகான் வால்மிகி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. வரம் தரும் ஞான வள்ளலே
வாழும் ஞானியே அரங்கனே
அறம் கொண்டு மக்களிடை
அற்புதம் நிகழ்த்தும் தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது கலை திங்கள்
ஆசிபட அட்டம திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 08ம் நாள் 22.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
அருளுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை வால்மீகி யானும்
அகிலத்தார் பண்புற உரைப்பேன்
வாசி வென்ற ஞானிகள் படை
வரம்தர அரங்க மகானுள் இருக்க
4. இருக்கவே பொய்யான வழிதேடி
எல்லாத் திக்கிலும் அலைந்திடா
கருத்தாக பிரணவக் குடிலை
கண்டு வணங்கி வந்திட
5. வந்திட அவரவர் விரும்புகின்ற
வல்லமை மிக்க ஞானிகளே
சிந்தை கலந்து அரங்கன்வழி
சிரம் தொட்டு உங்களுக்கும் தரும்
6. தருகின்ற ஆசி தீட்சை வழி
தவம் போல சக்தி கிட்டியே
விரும்புகின்ற ஞானிகள் ஆசி
வினை போக்கிக் காத்தருளும்
7. அருள்மிக்க அரங்கன் வழி
ஆறுமுகப் பெருமான் தந்த
கருணை நிறைந்த ஞானவழி
கண்டு கேட்டு இணைபவர்க்கு
8. இணைபவர்க்கு மெய்யான வழியாகி
இவை பிறப்பின் சூட்சுமங்கள்
துணையான அரங்கன் தயவில்
துரிதகதி விளங்கி மாற்றம்
9. மாற்றம் தானாக நடக்கும்
மகான் தயவு நெறிபடத் தொடர
ஆற்றல் கூடி ஆத்ம பலமுடன்
அறிவில் தெளிவு பண்பாளர்களும் ஆகி

10. ஆகியே அரங்கன் தேடலில்
அனைவரும் தேற்றம் கண்டு
அகிலம் மாற்றும் சக்திகளாக
ஆவரே ஞானவான்களுமாக

11. ஆகிட தரும ஞான பலமும்
அளவிலாப் பெருகிச் சிறந்து
அகிலமும் ஞானஆட்சி கண்டடையும்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–